**செய்தி வெளியீடு எண்: 04/08/2021** **நாள்: 15.08.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 75-வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது

இந்தியத் திருநாட்டின் 75வது சுதந்திர தின விழா இன்று (15.08.2021) கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் போது சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பூப்பந்தாட்டம், டேபிள் டென்னிஸ், சுறுசுறுப்பான நடை (Brisk Walk) மற்றும் நடைப்போட்டி (Walkathon) ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற 40 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் 21 அலுவலர்களுக்கு அவர்களின் சேவையை அங்கீகரித்து கௌரவிக்கும் விதமாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவை (Azadi ka Amrut Mahostav), கொண்டாடிடும் வகையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் (CII)'s யங் இந்தியன்ஸ் உடன் இணைந்து 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான "இந்தியா - 75 இளைஞர் மாநாடு" என பல்வேறு போட்டிகளை (ஓவியப் போட்டி, சுவரொட்டி உருவாக்கும் போட்டி, வாசகம் எழுதுதல் (Slogan Writing), கட்டுரை எழுதுதல், கல்வி மற்றும் தொழில்நுட்பத்திற்கான எதிர்கால தீர்வுகள் குறித்த எழுத்துப்போட்டி) இணையவழியில் நடத்தியது. இந்த போட்டிகளில் மொத்தம் 5500 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் இன்று (15.08.2021) நடைபெற்ற சுதந்திர தின விழாவின் போது, இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற 57 மாணவ, மாணவிகளுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்..

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தனி மனித இடைவெளியை கடைபிடித்து பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**